உ

கடவுள் துணை.

நெல்லுகுத்துகிற பதமும்,

இராயபுரம்

ரெயில்வே ஸ்டேஷன் கும்மியும்,

நாத்தினர் வாயாடியென்று வழங்கும்

திருமணக்கண்காட்சி ஓடமும்,

அடங்கியிருக்கின்றன.

எஸ். பி. இராஜாராம்

அவர்களது,

சென்னை சூளை - ஸன் ஆப் இந்தியா அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

இதன்விலை] 1923 [அணா ½

நெ 14. ஆரிமுத்துமேஸ்திரிவீதி சூளை மதராஸ்.

கடவுள் துணை.

நெல்லு குத்துகிற பதம்

விநாயர் தோத்திரம்-வெண்பா.

கார்குழலார்மாதரெல்லாங் கண்டுகளித்திடவே
சீராய்நெல்லுகுத்தும்விதம் செப்புகின்றேன்பார்மீதில்
மங்கைமணவாளனுமாய் மாரிநெல்லுகுத்துதற்கு
துங்கமுகவைங்கரன்ருள் துணை.

வள்ளியம்மன் தோத்திரம்.

(ஆ) பிள்ளையார் தோத்திரம்சொல்லி
முரத்திலே நெல்லையள்ளி
பொன்குந்தாணியை நீதள்ளி
குத்தண்டிவுன் பாட்டைசொல்லி-அ-ஆ-உ-ஊ 1

(ஆ) நெல்லுகுத்துரபதத்தை நான்
சொல்லிவாரே னவ்விதத்தை
நில்லுநீ உலக்கைபிடித்தே
வல்லாளாயென்னுடன்குத்தே-அ-ஆ-உ-ஊ 2

(பெ)கொண்டவனே கடன்காரா
குத்தமயங்காதே வாடா
வண்டிநெல் லாகிலும்சீராய்
நான்வாரிப்புடைக்குறேன்பாரா-அ-ஆ-உ-ஊ 3

(ஆ) குத்துறேன் கேளடி முத்தே
குறத்திவள்ளி சதைசற்றே
என்மீதில்மனம் வைத்தே
என்னுடன்சொல்லிநீ குத்தே-அ-ஆ-உ-ஊ 4
(ஆ) அடி சென்னைநகர் கடன்காரி
சிந்தாமல் நெல்லைவாரி
அடி-குந்தாணியைத் தள்ளிப்போடு
நான்குத்துர உலக்கையைபாரு-அ-ஆ-உ-ஊ 5
(பெ) நாடுயென்று லதுநாடு
பனங்காடுள்ள குரநாடு
சுற்றிலும் வெகுகாடு
நடுவிலிருக்கும்வீடு-அ-ஆ-உ-ஊ 6
(ஆ) சீக்கிரம்சொல்லடி மானே வுன்
சித்திரவாயாலைத் தானே
குத்திரமாநெல்லைத் தேனே
சுருக்கினில்குத்துவன் ஞனே-அ-ஆ-உ-ஊ 7
(பெ) வள்ளிபிறந்தாள்மான் வயற்றில்
துள்ளியழுதாள் கானகத்தில்
கள்ளமில்லா வேடர்கிரகத்தில்
கொண்டுசென்றூரவர் க்ஷணத்தில்-அ-ஆ-உ-ஊ 8

(ஆ) அவளைமாலையிட்ட தாரோ
அவர்பிறந்ததெவ் வூரோ
சிவனருள்மைந்த ஞரோ
நல்-வல்வினைதீர்த்திடுவாரோ-அ-ஆ-உ-ஊ 9

(பெ)ஐயன்சிவசுப்ரமணியர் அவர்
அழகுள்ள பன்னிருகையர்
மெய்யனருந் துய்யர்
மேதினிகாத்திடுங்கையர்-அ-ஆ-உ-ஊ 10

(ஆ) ஆனந்த மாச்சுது பெண்ணே
அப்புறஞ்சொல்லடி கண்ணே
தான தர்மம்நீ பண்ணே
தினங்கதைமுடிமுன்னே-அ-ஆ-உ-ஊ 11

(பெ)புனத்தில் வள்ளியைக் கண்டார்
தினைமாவுந் தேனு முண்டார்
குணவதியை மணங்கொண்டார்
கூசாமற்றணிகையிற் சென்றார்-அ-ஆ-உ-ஊ 12

வள்ளியம்மன் சரித்திரம்-முற்றிற்று.

இராமயண சரித்திரம்.

(ஆ) ராமாயணக்கதைச் சொல்லு-அவர்
நாமமனுதின மெல்லு
பாமரந்தன்னைநீ தள்ளு
பக்தர்பந்துதிகொள்ளு-அ-ஆ-உ-ஊ 13

(பெ) கோட்டையாவது கோட்டை அது
லங்காபுரிக் கோட்டை
கோட்டைவெகு தேட்டை
தங்காமல்செல்லும் பாட்டை-அ-ஆ-உ-ஊ 14

(ஆ) கோட்டையை யாண்டவனுரோ அடி
கொம்பனையே யென்னபேரோ
அவனைகொன்றவ னுரோ
அவர்பிறந்ததெவ்வூரோ-அ-ஆ-உ-ஊ 15

(பெ)ராமர்பிறந்த தயோத்தி அந்த
ராக்ஷதன்மாண்டதும் னேத்தி
ராசரிஷிபாதம்போற்றுனே கீர்த்தி-அ-ஆ-உ-ஆ 16

(ஆ) ராமாயணக்கதை யின்பம் அதை
கேட்டலகன்றிடும் துன்பம்
யேதுக்குதவியிச் சென்மம்
யிப்போதே நீங்கிடும் கன்மம்-அ-ஆ-உ-ஆ 17

(பெ)சீதைதனை மாலையிட்டு
சிறப்பாய் மிதுலையைவிட்டு
சேனையெல்லாம் நிலைகெட்டு
சேர்ந்தாரெல்லாம் ஒருதிட்டு-அ-ஆ-உ-ஆ 18

(ஆ) அப்புறஞ்சொல்லடி மானே
அன்புடன்கேட்கவே னுனே
துன்பம்அகன்றிடுந் தேனே
துரிதமாய்சொல்லுநீ தானே-அ-ஆ-உ-ஆ 19

(பெ)பரசுராமன்வந்து தடுக்க
பரந்தாமனவனையே ஒடுக்க
அரசுபட்டமதை கொடுக்க
அப்பாவிகைகேசி முடுக்க-அ-ஆ-உ-ஆ 20

(ஆ) அந்தவேளையாச்சி மானே
முந்திசொல்லுநீ தானே
யெந்தனுக்கினிய தேனே
யேதென்றுசொல்லுவேன் ஞானே-அ-ஆ-உ-ஊ 21

(பெ) அன்புடன் தாய்சொல்கேட்டு
அப்பொழு தயோத்தி விட்டு
சித்திரகுடமது கெட்டு
சேர்ந்தார்கள் மூவர்களுமொத்து-அ-ஆ-உ-ஊ 22

(ஆ) அப்புறம் சொல்லடி சேதி
அப்பப்பா யிதென்ன நீதி
அப்பால் நடந்ததோர் சேதி
தொப்பெனச்சொல் அடிப்பூதி-அ-ஆ-உ-ஊ 23

(பெ) ராவணன் சீதையைக் கெடுக்க
ராமதூதன் கண்டு பிடிக்க
ராகவன் கரத்தால் துடிக்க
ராஜ்யம் ஆண்டாரென்று படிக்க-அ-ஆ-உ-ஊ 24

(ஆ) சொன்னதுபோதும் பெண்ணே
சுகுர்தவானேும் ஞமின்னே
முன்னேவீடுசெல்வோங் கண்ணே
மூவுலகம்வாழி பெண்ணே-அ-ஆ-உ-ஊ 25

நெல்லுகுத்துகிற பதம்-முற்றிற்று.

கடவுள் துணை.

ரெயில்வே ஸ்டேஷன்

கடக்கால் கும்மி.

வெண்பா.

புகைபூண்டுயோடும் புகைவண்டிகும்மி
வகையுடனேயான்பாட வரமருளும்-தேசந்தனிலே
ஆதிசத்திபாலகனே அன்புடனேயென்னுவில்
நீதியுடனேகாத்தருளும் நின்று.

நன்னே நன்னுநானே நன்னு
நன்னு நானேநானே நானேநன்னுநானே

சென்னப்பட்டணமெனுங் கெடிஸ்தலத்தில்
தன்னுலேறயில்போட ருயபுரத்தில் (நன்)
ராயபுரத்தில் ரயில் ரோட்டுபோட
நவாப்புகெவுனர் செனல் மேஜருங்கூட (நன்)
கர்னல்துரைசிப்பாயி துருப்புதானே
சேர்ந்தார்போலீசுதுரை சேவகனுடனே (நன்)
வேட்டுகள்போட்டார்கள் யிருபத்தொண்ணு
பட்டாளம்துருப்பு ரயிட்செய்தார்நின்னு (நன்)
சிறந்தயிஞ்சினீரோடி கொடிபிடிக்க
இருந்தயிஞ்சினீர்நிலம் அளந்தான்நெடுக்க (நன்)
மண்ணைபெரன் மண்வெட்டியால் நவாப்புவெட்ட
மண்ணையேந்திகெவுனர் சுமந்துகொட்ட (நன்)

நவாப்புகையால்முகூர்த்தம் செய்துவிட்டபின்
அப்போதுசாதுரியமாக வேலைக்காரர்கள் (நன்)
சட்டமாய்நிலத்தில்மரம் பரப்பிவைத்து
திட்டமாய்யிரும்புசட்டம் சாயாமல்வைத்து (நன்)
புகைவண்டிகிரிசையோ டாறுசக்கரம்
வகையுடன்பின்வண்டிக்கி நாலுசக்கரம் (நன்)
வண்டியின்மேல் அனல்போட ஆனையைப்போல
ஒண்டிகுழைபோக வைத்தின்மேலே (நன்)
தொட்டிவைத்து தண்ணிரொப்பி அனல்மூட்டி
பொட்டிவண்டி சாமான்வண்டி பின்னாலேபூட்டி (நன்)
புகைபோட்டுச் சாவிக்கொண்டு ஆள்முடுக்க
திகைத்திடும்படிசத்தம் கீச்சென்றெடுக்க (நன்)
போகுதுபாரயில் போகுதுபார்
வேகமாய்புகைந்து சீறிபோகுதுபார் (நன்)
அங்கங்கேடேஷன்தோறும் வண்டிநிறுத்தி
தங்கியகனசாமானை வண்டியிலேற்றி (நன்)
ராயபுரத்தில்ரயில் புறப்பட்டது
ஓயாமல்மேல்சமுத்திரம் சேர்ந்துவிட்டது (நன்)
மகிழ்நாதர்சாப்றயில் வேகத்தைப்பாடி
புகலவேகேளுங்கள் யாவருங்கூடி (நன்)

இராயபுரம் ரெயில்வே டேஷன்-கடக்கால் கும்மி

முற்றிற்று.

சிவமயம்.

நாத்திஞர் வாயாடியென்று வழங்கும்

திருமனக் கண்காட்சி ஓடம்.

(மாப்பிள்ளையை மைத்துனமார் ஏசுதல்.

எலேலோதத்தையா எலலிலோ
ஏலோலோ எலலிலோ

தேசாதிதேசமெங்கும் தாய்தந்தை தேடிவந்த மாப்பிள்ளையை மோசமாக அழைத்துவந்து வெகுபரிந்து மிக வார்த்தைசொல்லி (சஞர்) அத்தானே அத்தானே ஓய் அத்தானே கேளும் அழகுசபைதனிலுள்ள அனேவரும் கேளுங்கள் தேவாரஞ் சொல்லென்ருல் தாவாரம்போவார் தேவடியாள் வீடென்ருல காவலாயிருப்பார் ஆனேமேலேரென்ருல் பானேமேலேறுவார் ஆத்துக்குப்போவென்ருல் ஊத்துக்கு போவார் மாடிமேலேரென்ருல் காடிமேலேறுவார் மச்சுக்குள் நுழை என்ருல் குச்சுக்குள் நுழைவார் கச்சேரிபோவென்ருல் புச்சேரிபோவார் கணக்குகளைப் பாரென்ருல் பிணக்காகப்போவார் அண்டையிலே வாருமென்ருல் சண்டையிலேபோவார் ஆடுகளைப் பாரென்ருல் மாடுகளை மேய்ப்பார் இப்படி சமர்த்துள்ள மாப்பிள்ளையைத் தேடியிருந்தாரே உன் தந்தையென்றுமேனடி போஜனக்காரர் புகழ் கெட்டிக்காரர் ஒருபரிக்கை குரைந்தாலே எழுந்திருக்க மாட்டார்-ஏலேலோ.

நாத்திமார் பெண்ணைப்பழித்தல் ஓடம்.

மங்கையரே உனக்கேற்ற மணவாளன் வாய்த்ததினால் உங்கள் முன்னோர் செய்தவந்தான் உந்தனுக்குக் கிடைத்ததினால் அங்கமெல்லாம் மினுமினுப்பும் ரொம்ப அழகுகளுமுண்டாச்சு சங்கையுட னிருந்ததுபோ யிப்போ சரியிருக்க சபையிலாச்சு

(முடுக்கு) நல்லதோ ரெண்ணெயைக் காணாத திரேகம் நலமுள்ள சம்பங்கி தைலங்க ளனேகம் இலுப்பைப்பூ பொருக்கித்திரிந்ததும்போச்சு-இப்போ தெருவாசல்வாராமலாச்சு மந்தை மாட்டின்பின் திரிந்ததும் போச்சு மாறுமல் பத்துப்பெண் கூட்டுறவுமாச்சு சிப்பிகளும் விரட்டிகளும் விற்றதும்போச்சு சொகுசான அன்னநடை கைவீச்சுமாச்சு ராப்பட்டினி ரொம்பவுங் கிடந்ததும்போச்சு நால்வகைக் கறியுட னுண்டிடவுமாச்சு தீபாவளி எண்ணெ கண்டதும் போச்சு தினம்தினம் மினுக்கெண்ணெ திரேகத்திலாச்சு அங்காடி தூக்கியே அலைந்ததும்போச்சு அதிகாரம் நால்வகை செய்திடவுமாச்சு ஓயாமற் சளிகளைச் சிந்தினதும் போச்சு ஒழுகின்ற மூக்குக்கு நத்துபுலாக்காச்சு கருமேகம் போலவே யிருந்ததும்போச்சு கணவனைக் கண்டவுடன் கனத்தசிகப்பாச்சு கந்தைகளைப் போற்றிய காலமும்போச்சு காணாதபட்டுகளுடுத்திடவுமாச்சு மண்ணாலே நகைபண்ணி பூண்டதுவும்போச்சு மணவாளன் வந்தபின் பொன்பணிகளாச்சு பொல்லாத நீலியென்று புகன்றதுவும் போச்சு புரு

வடிவனக்கண்டவுடன் பொருமைமிகவாச்சு சாணிகளைத் தட்டின காலமும்போச்சு சந்தனமெடுத்தினி சரிபூசலாச்சு புண்ணுக்குதின்றதோ ரந்நாளும்போச்சு புகழலட்டு மிட்டாய் புசித்திடவுமாச்சு கஞ்சிகளைக்காச்சியே குடித்ததும்போச்சு கனமுள்ள கறிகளை வுண்டிடவுமாச்சு வலியநெற் குத்திய நலிகாலம்போச்சு வகையான பூச்செண்டு தாங்கிடவுமாச்சு வெய்யலிலுங் கானலிலுமலைந்ததும்போச்சு வெளியெட்டிப் பாராமல் உள்நிற்கலாச்சு உளுத்ததோர் கேழ்வரகை தின்னதுவும்போச்சு ஓயாமல் தாம்பூலம் தின்றிடவுமாச்சு பீற்றப்பாய்தன்னிலே புரண்டதும்போச்சு பேரானகட்டிலில் துயில்கொள்ளலாச்சு இத்தனையும் வந்தது யாராலே பெண்ணே எண்ணிநீ பார்த்தாயோ எங்களுடையண்ணன் புருஷனால் வந்ததோர் இப்பெரிய வாழ்வு போகாது இனிமேலே வாராது தாழ்வு தகப்பனார் செய்ததோர் தவமுயற்சியாலே தகுந்தமாப்பிள்ளை வாய்த்தார் அறிவாயினிமேலே ஏலே லோ ஏலேலோ.

சம்மந்தியைப் பழித்தல்.

காக்கை கருத்திருக்கும் கோவிந்தா கடல்தண்ணீ ருப்புரைக்கும் காத்தடித்தால் மரமசையும் கோவிந்தா கல்லெறிந்தால் சம்மந்திக்கு பல்லுடையும் (சரூர்) ஆங்கார சிங்கார வாகனமூளி அத்தையும் பாட்டியும் அடங்கலும்மூளி ஆத்தக்கு வந்ததோர் காட்டுப்பெண்மூளி அரிசி அரைத்துவைத்த குடக்கல்லிமூளி எடுத்துக் கரைத்துவைத்த கல்சட்டியு

மூளி சூடு கொடுத்ததோர் தோசைக்கல்மூளி வாங்கிவைத்த தொரு மரத்தட்டுமூளி சாப்பிடவந்ததோர் சம்பந்திமூளி பிள்ளையுஞ் சம்மந்தி பெண்சாதிமூளி நன்னுகவே சாப்பிடு வாள் கோதுமைபோளி மனையிலிருக்கின்ற பெண்பத்திர காளி எலேலேலோ எலேலேலோ.

சபையில் தாய்பிள்ளையின் குணத்தைப் புகழ்தல்.

இப்பெரிய சபைதனிலே வந்திருக்குமந்த யாவர்களும் ஒப்புக்கொள்ள நானொருசொல் இனி உண்மைதனை உரை செய்கிறேன் செப்பரிய ஸ்தலத்திலிருந்து தந்தைசெய் தவத்தால் வந்துதித்த தப்பிலாத மாப்பிள்ளையின் செய்தி சபைதனிலே உரைசெய்கிறேன்.

(முடுக்கு) தந்தைதாய் மனநோக நடக்கவேமாட்டான் தாரணியிலிவன்போல வுவமைசொல்லக்கூடா பூமிகளதிர்ந் திட நடவாத மன்னன் புண்ணியந் தருமமென்றெண்ணே லாஞ் சொன்னேன் பொய்சொல்லுவோர்களை வாயைக் கிழிப்பான் பொல்லாத பேர்களை வல்லமையழிப்பான் புத் தியில் மிகுந்தவன் வித்தைக்கு நிகரார் பூதலத்தொருவரைப் புகலவொண்ணாது தயவினில் மிகுந்தவன் தாட்டீகமுள் ளான் தனமிகவே யீந்தாலும் பொய்வார்த்தை சொல்லான் மேவானகாரியந் தனைத்தேடுவானே கருணைக்கனிபோலே தலைமயிரமொத்து காணலாமே வங்கத்தகடுபோல் நெற்றி வேப்பிலைபோற் புருவந் திலதமதுவொக்கும் விளக்குங் கண்ணாடிதனைப்போல் கண்ணிறகும் எலுமிச்சம்பழம்போல்

உருண்டதோர்கண்ணும் இயல்பான பொன்சிமிழ் நாசி யென்னுங் கட்டாணி முத்துபோலிருக்கின்ற பல்லும் கற் கண்டு சீனியைப் பழிக்குமிவர் சொல்லும் கோவைக்கனி போல் இருக்கின்ற வுதடும் கொஞ்சமும் வஞ்சகமெண்ணுத மனமும் மூங்கிலடியைப்போ லிருக்கின்ற கழுத்தும் முகுந்த னிட மைந்தனென காறனை வழுத்தும் தங்கத்தின்பலகை போல் விரிந்ததோர் மார்பும் சரியாகத் தருமன்போ லிருக் கின்ற சார்பும் மந்திரகிரிபோலச் சந்திர புஜமும் மங்கையா கண்டாலே தங்கள்கைவசமாம் அழகினில் மன்மதன் தச ரதபாலன் அமைந்தாரே பெண்ணே கேளுனக்கேற்ற சீலன் தாய்தந்தை செய்ததோர் தவமரியதாலும் தப்பாமல் இக்கணவன் வாய்ந்ததுபோலும் மணவாளன் வாய்த்தது மாதே வுனதிஷ்ட மங்கையே வாய்த்தது வுன்தாயதிர்ஷ் டம் இந்ததோர் மருகனுல் சம்மந்திகேளு ஈரேழு தலே முறையும் சுகமாச்சுநாளும் குணமாக யானுமே சொல்வதே வாக்கியம் கோதைவுண்டாச்சு உனக்கு வெகுபாக்கியம் ஏலேலோ ஏலலிலோ.

மைத்துனிமார் அத்தானை யேசுதல்

சாமராகம் - அடதாளம்.

அத்தானவர்க்கெங்கள் அக்காளாலல்லவோ
அதியோகமுண்டாச்சுதே காப்புமாச்சுதே கையும்வீசு
நித்தியம்நல்ல இஸ்திரிசொககாய் முற்றுதேமுற்றுதே
கற்றுழைநாற்ற மணக்கின்ற மேனிக்குக்
கதம்பம்பூசலாச்சுதே நாற்றம்போச்சே மணமாச்சே
உற்றநாலுக்கு சித்திரசோடும் பெற்றதே பெற்றதே

குடலோடொட்டிய வயரிப்போ புட்டுக்
கூடைபோலாச்சே வாட்டம்போச்சே தேட்டமாச்சே
வடையுடன்போளி தடையிலாதுண்ண வாச்சுதேவாச்சு

திண்ணை தூங்கியென்று பேரெடுத்தோர்க்கின்று
திண்டுதிமாச்சாச்சே கட்டிலாச்சே சோபாவாச்சே
பண்ணுடனேவாய் வண்பிடிலோடும்பாடுதே பாடுதே

நாட்டுப்புரத்தினில் மாட்டைமேய்த்திருந்த
நாள்களெல்லாம்போச்சே பல்லக்காச்சே சாரட்டாச்
வாட்டமாங் காகிப்பேட்டு துப்பட்டாவாச்சுதே வாச்சுதே

வாத்தியார்க்கீய வழியில்லாதவர்க்கு
கூத்தியாருண்டாச்சே குடையாச்கே நடையாச்சே
தோத்திரங்களும் சாஸ்திரங்களும் தோன்றுதே

வண்டியோட்டிப்பிழைத்த பிழைப்பும்போய்
வாகனமுண்டாச்சே ஒயிலாச்சே சொகுசாச்சே
திண்டுமற்சார்ந்து கொண்டிருக்கவும் தேடுதேதேடுதே

நெற்றியிலொன்று மிடாதிருந்தவர்க்குக்
கஸ்தூரிபொட்டாச்சே முருகாச்சே திருகாச்சே
சுத்தமாகிய முத்துகண்டியுங் தொங்குதே தொங்குதே

கஞ்சிதொட்டியிற்போய் கஞ்சிகுடித்த
அக்காலமெல்லாம் போச்சே முருகாச்சே திருகாச்சே
பஞ்சிடும்புஷ்பமஞ்சமேற்றுயில் மிஞ்சுதே மிஞ்சுதே

நாத்தினிமார் அண்ணியரை எசுதல்.

தரு-காம்போதிராகம்-ஆதிதாளம்-பல்லவி.

அண்ணனல்லவோ வந்தது இந்தயோகம்
எங்கள் அழகான அண்ணியர்க்கு
ஆர்க்குத்தானுண்டு பாருங்கள் இந்தபோகம்

சரணங்கள்.

வண்ணாத்தியுடுப்பும்போச்சு வர்னபட்டு சேலையாச்சு
திண்ணை தூங்குங் காலம்போச்சு சிறப்பாச்சு
பிண்ணாக்குத்தின்னதும்போச்சு பேணிலட்டலுவா யாச்சு
மண்ணிலிறந்ததும்போச்சு வட்டிக்குக் கொடுக்கலாச்சு

கப்பரையொளித்துப்போச்சு கனவெள்ளி கிண்ணியாச்சு
செப்பிய கருப்புடம்பு செகப்பாச்சு
கப்படித்த காலம்போச்சு கஸ்தூரிபூசலாச்சு

செப்புமோதிரங்கள்போச்சு செம்பொற்கணையாழியர்ச்சு
கூறப்பாய்படுக்கைபோச்சு புஷ்பசயனமுமாச்சு
கீரைவிற்ற காலம்போச்சு கெவுரவமாச்சு
கீறைமணி பதக்கம்போய் கெம்பட்டிகை பண்ணலாச்சு
நாரவாயினுக்கு எலம்லவுங்கந் தாம்பூலமாச்சே.

சாணியெடுத்த காலம்போச்சு தங்கக்காப்பு கொலுசு மாச்சு, வாணிச்சி, பிண்ணாக்குப்போச்சுவடையாச்சு, கோணி தைத்த காலம்போச்சு குசுனிபாவாடை யாச்சு, மூன்று

நாள் பட்டினிபோச்சு முப்பழஞ் சக்கரையாச்சு நடவுநட்ட காலம்போச்ச நகையுநட்டு மதிகமாச்சு குடலோடொட்டிய வயிர் கோணியாச்சு, செடிசுற்றிய காலம்போச்சு தெரு வெட்டிப் பார்க்காமலாச்சு படியுழக்கு பேனும்போச்சுப் பந்திசெண்டும் சூடலாச்சு.

ஒட்டைக்கால் நடையும்போச்சு ஒயிலன்ன நடையுமாச்சு, தண்டைசுருள் கொலுசுதானுச்சு, கொண்டை திருகுடன் முத்துக்கொப்பு மயிர்மாட்டியாச்சு, விண்டிலங்கு சூரியன்போல் மின்னுஞ் சடைபில்லை யாச்சு மூங்கில்நாழி கழுத்திற்கு மோராமாலை பூணலாச்சு, பாங்குடன் கம்மல் கம்மல்கததிரிபாவலாச்சு. பாங்கியர்களென்னேரமும் பக்கத்திலிருந்துகொண்டு தாம்பூலமடித்துத் தலவாய்க்கொடுக்கலாச்சு. அண்

தங்கரத்ன வளையலாச்சு தாபிதா பாவாடைக்குமேல் சங்குவிட்ட காசிதுப்டா சொகுசாச்சு ரங்குமிக மிஞ்சுபோச்சு நாணயங்கை வீசலாச்சு, பொங்கும்விரல்கட்கு ரத்தின புதுமோதிரங்கலாச்சு.

திருமணவோடம் முற்றிற்று.

நாலாயிர திவ்ய ப்ரபந்தம்.

ப்ரமபதத்தில் நிரதிசயாநந்தனாய் ஸ்ரீ பூமி நீளைகளோடு எழுந்தருளியிருக்கும் எம்பெருமான், உலகத்திற்றோன்றி நற்கதியடையும் மார்க்கங் காணாது வருந்தும் மானிடர்கள் உஜ்ஜீவிக்கவேண்டி ஸ்ரீ வத்ஸ கௌஸ்துப வைஜயந்தி வனமாலைகளையும், ஸ்ரீ பூம்நீளைகளையும், ஸ்ரீ பஞ்சாயுத ஆழ்வார்களையும், அநந்தகருட விஷ்வக்சேன பரப்ருதிகளையும் ஆழ்வார்களாக அவதாரம் செய்வித்து, அவர்களால் த்ராவிடவேத ரூபமாகிய இந்த திவ்யப் பிரபந்தங்களை வெளிவரச் செய்தாராதலால், பகவத் குணங்களை ஆஸ்ரயித்து பாராயணம் செய்ய இது மிகவும் அவசியமாயுள்ளது. இதில் பன்னிரு ஆழ்வாராசாரியர் களுடைய சரித்திரங்களும் அவர்களுடைய அழகிய திருவுருவப்படங்களும் அடங்கியிருக்கிறது. இதன் விலை ரூபா 4 0 0

மதனசேகரன்—இது ஓர் வேடிக்கையான நாவல். மணக்கோல மாப்பிள்ளை பிணக்கோலமான பரிதாபமும், காத்திருந்தமாதை பார்த்திருந்து போனவ[illegible]ச்சியும், சமயபேதமும், ஆலோ[illegible]

விலை அணா 0 8 0